# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 7/2016 நாள்: 28.09.2016

## தேர்தல் பார்வையாளர்கள் கூட்டம்

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016-ல் இரு கட்டங்களாக நடைபெறுவதையொட்டி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு.பெ.சீத்தாராமன், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் தலைமையில் 28.09.2016 காலை 11.00 மணியளவில் மாநில தேர்தல் ஆணைய கூட்டரங்கில் தேர்தல் பார்வையாளர்களுக்கான கூட்டம் நடைபெற்றது.

இந்த தேர்தல் பார்வையாளர்கள் கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திரு.த.சு. ராஜசேகர், இ.ஆ.ப., மற்றும் இந்திய ஆட்சிபணி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் தலைமையேற்ற மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் பேசும் போது தேர்தல் நடைபெறும் பொழுது தேர்தல் பார்வையாளர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்தும் ஆணையத்தினால் வழங்கப்பட்ட ஆணைகள், அறிவுறைகளுக்கான விவரங்கள் குறுந்தகடுகளாக வழங்கப்பட்டுள்ளன எனவும் அவற்றை பார்வையாளர்கள் பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

**தேர்தல் பார்வையாளர்கள் கள பார்வையின் போது கவனிக்க வேண்டியவைகள்:**

1. வாக்காளர் பட்டியல்கள் தேவையான எண்ணிக்கையில் உள்ளனவா என்று சரிபார்க்க வேண்டும்.
2. அதிகமான அளவில் வாக்குச்சாவடிகளை ஆய்வு செய்தல் வேண்டும்.
3. பெறப்பட்ட வேட்பு மனுக்களின் விபரங்களை அறிந்து வைத்திருக்க வேண்டும்.

4. தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணிகளுடன் தொடர்புடைய அலுவலர்கள் கூட்டத்தை நடத்த வேண்டும்.

5. வாக்குப்பதிவு மற்றும் அது தொடர்பான பொது மக்களின் குறைகளையும், புகார்களையும் தொடர்புடைய மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மூலம் தீர்த்து வைக்க வேண்டும்.

6. கட்சி அடிப்படையில் வாக்குச்சீட்டுகள் அச்சடித்தல் குறித்து மேற்பார்வை செய்தல் வேண்டும்.

7. மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் மூலம் வாக்கு எண்ணிக்கை மையங்களில் தேவைப்படும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.

8. தேர்தல் நடத்தை விதிகளை உறுதியாகப் பின்பற்றுதல், விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் புகார் செய்தல் வேண்டும்.

9. தேர்தல் முடிவுற்றது தொடர்பாக அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

10. வாக்கு எண்ணிக்கையைப் பார்வையிடுதல், முடிவறிக்கை சமர்பித்தல் வேண்டும்.

11. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தினால் குறிப்பிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் சிறப்பு அறிக்கைகளை அனுப்புதல் வேண்டும்.

இந்த உள்ளாட்சி தேர்தல் நியாமாகவும், அமைதியாகவும் நடத்த தேர்தல் பார்வையாளர்கள் முழு ஒத்துழைப்பு அளித்து பணியாற்ற வேண்டும் என்று மாநில தேர்தல் ஆணையர் கேட்டுக்கொண்டார்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

28.09.16

மக்கள் தொடர்பு அலுவலர்